பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 10 2025 THURSDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடு முழுவதும் கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி அடுத்த நான்காண்டுகளில் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கச்சத்தீவை மீட்க இலங்கை பிரதமரிடம் வலியுறுத்துமாறு மத்திய அரசை, தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- தேனி, தென்காசி உள்ளிட்ட ஏழு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- ஆசிய பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலம் Kurnool-ல் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும், நகரங்களிலிருந்து துறைமுகங்களுக்குமான சாலை இணைப்பு வசதி மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அனைத்துத்துறைகளிலும் இந்தியா சாதனை படைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தூய எரிசக்தி உற்பத்தியிலும் இந்தியா முத்திரை பதித்து வருவதாக அவர் கூறினார்.

மக்கள் நலனை கருத்தில்கொண்டே வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி அடுத்த நான்காண்டுகளில் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புனேயில் கல்லூரி பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி 3 லட்சம் கோடி ரூபாயை எட்ட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறையின் சுயசார்பு, ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

நக்சலைட்டுகள் ஆயுதங்களை கைவிடாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா எச்சரித்துள்ளார்.

*சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சட்டீஸ்கரில் இன்று ஒரே நாளில் 170 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இந்த மாநிலத்தில் நக்சலைட்டுகளின் மையமாக இருந்த வடக்கு Bastar மற்றும் Abujmarh, தற்போது நக்சலைட் பிடியிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

<<<<<<>>>>>>

*கச்சத்தீவை மீட்க இலங்கை பிரதமரிடம் வலியுறுத்துமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.*

*இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியா அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ளதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக்குழுவை மீண்டும் புதுப்பிக்கவும் இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளர்.*

<<<<<<>>>>>>

*தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக கூட்டணி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*அஇஅதிமுக-வின் 54-ஆவது ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு அக்கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும், போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

<<<<<<>>>>>>

*தமிழகத்தின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.*

*இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கூகுள் நிறுவனத்தின் 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டினை ஆந்திர முதலமைச்சர் பெற்று சாதனை படைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழக முதலமைச்சரோ FOXCON நிறுவனத்திடமிருந்து 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு பெற்றதாக தவறான தகவலை தெரிவித்து வருவதாக அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

<<<<<<>>>>>>

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் மூலம் அனைத்துத்தரப்பினரும் பயனடைந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*குறிப்பாக, தீபாவளி பண்டிகையையொட்டி இந்த வரி குறைப்பு செய்யப்பட்டிருப்பது வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Sound Byte – வெங்கடேஷ் - 29 Sec.)*

<<<<<<>>>>>>

*தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(Sound Byte – அமுதா (1) 36 Sec. )*

*தேனி, தென்காசி உள்ளிட்ட ஏழு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திருமதி அமுதா தெரிவித்தார்.*

*(Sound Byte – (2) 31 Sec. )*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*மதுரை மாவட்டம் கடவூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ், மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று தொடங்கிவைத்தார்.*

-------------

*திருவாரூர் மாவட்டத்தில் 12-ஆம் வகுப்பு பயிலும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கான கல்லூரி களப் பயணத்தினை ஆட்சியர் திரு மோகனச்சந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.*

---------------

*வேலூர் மாவட்டம் குடியாத்தம் வனப்பகுதியில் சட்ட விரோதமாக வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த 15 நாட்டு வெடிகுண்டுகளை வனத்துறையினர் பறிமுதல் செய்து செயலிழக்கச் செய்தனர்.*

-------------

*நாமக்கல் மாவட்டத்தில் குறைந்த விலையில் பட்டாசு மற்றும் பலகாரங்களை விற்பனை செய்வதாக கூறி, இணையதளம் வாயிலாக சைபர் குற்றவாளிகள் பணம் பறிப்பதாகவும், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் 1 9 3 0 என்ற எண்ணை தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம் என்றும் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.*

-------------

*திருவண்ணாமலை மாவட்டம் பத்தியவாடி கிராமத்தில் இடி-மின்னல் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.*

-----------------

*திருச்செந்தூர் கந்தசஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வரும் 27-ஆம் தேதி நடைபெறவுள்ளதையடுத்து அன்றைய தினம் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.*

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆசிய பாரா டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் Jehan Madan மற்றும் Sandeep Dangi-யும், மகளிர் ஒற்றையர் பிரிவில் Ekta Bhyan-னும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

-----------------

*உலக இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sriram Adarsh Uppala வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*அல்பேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

--------------

*உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tankara Gnana Dattu Talasila காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 15-12, 15-13 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Garret Tan இணையை வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வி சர்மாவும், கலப்பு இரட்டையர் பிரிவில் Bhavya Chhabra – Vishakha Toppo இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

--------------

*ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

--------------

Jinan *ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale – சீனாவின் Zheng Wushuang இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

----------

*ஐ சி சி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருது இந்தியாவின் அபிஷேக் சர்மாவுக்கும், Smriti Mandhana-வுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<END>>>>>>*